Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, FEBRUARY 28, 2024

புதன்கிழமை பெப்ரவரி 28, 2024 | ஒளி: 09 கதிர் 201 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE




## “இலங்கை மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்”

“இராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்க தலைவர் எமரிட் இலங்கை மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அவர் மன்னிப்பு கேட்கத் தவறினால் இந்தியா எமக்கு வழங்கியுள்ள உதவிகளை திருப்பி கையளிக்க வேண்டிய நிலை ஏற்படும்” என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# “அரசாங்கத்தின் பலத்தை காட்ட இது நல்ல தருணம்”



சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடித்து அரசாங்கத்தின் பலத்தை காட்ட இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை உடனடியாக விவாதத்திற்கு உட்படுத்தப்பட வேண்டுமெனவும் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் செவ்வாய்க்கிழமை (27) கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த காலத்தில் பிஸியாக இருந்ததால் வெளிநாடு சென்றார். அவர் விரைவில் இலங்கைக்கு வருவார். இப்போதும் எமது அரசியல் வேலைத்திட்டம் கிராம மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அவர் வரும்போது கட்சியை பலப்படுத்தும் திட்டம் பரவலாக செயல்படுத்தப்படும்.

அடுத்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அண்மையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெளிவாகக் கூறியது. இரண்டு வருடங்கள் இரண்டு தேசிய தேர்தல்கள். நாட்டு மக்கள் முடிவெடுக்க இது சிறந்த வாய்ப்பு. அரசியலமைப்புக்கு புறம்பாக எந்த நேரத்திலும் தேர்தலை ஒத்திவைக்க மாட்டோம்.

முன் கூட்டியே நடத்த முடியும் அத்துடன் எந்த நேரத்திலும் வைக்க முடியும். நாட்டு மக்கள் அதற்கேற்ப செயல்படுவார்கள். முந்தி வைத்தாலும் சிறந்தது மற்றும் சரியான நேரத்தில் வைத்தாலும் சிறந்தது. அரசியலமைப்புக்கு புறம்பாக நாங்கள் செயற்படமாட்டோம் என்று கூறுகிறோம்.

தொடர்ச்சி P2



ஆப்பிள் பழ விலையில்

# இலங்கைக்கு 2ஆம் இடம்

உலகில் ஒரு கிலோ கிராம் ஆப்பிள் பழத்தை அமெரிக்க டொலரில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும் நாடுகளின் பட்டியல் தற்போது வெளியாகியுள்ளது.

இந்த பட்டியலை உலகின் மிகப்பெரிய வாழ்க்கைச் செலவு தரவுத்தளமான நம்பியோ (Numbeo) வெளியிட்டுள்ளதாக *The Spectator Index* டுவிட்டர் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்திலுள்ளதுடன், இங்கு 7.04 அமெரிக்க டொலருக்கு ஆப்பிள் பழம் விற்பனை செய்யப்படுகின்றது.

தொடர்ச்சி P2

# அமைச்சர் பதவியை

## இராஜனாமா செய்துவிட்டு போராடுவேன்

எல்லை தாண்டிய இந்திய மீன்பிடியாளர்கள் விடயம் தொடர்பில் அழுத்தங்கள் இந்தியத் தரப்பிலிருந்து இலங்கை அரசின் மீது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அமைச்சுப் பதவியை இராஜனாமா செய்து எமது கடற்றொழிலாளர்களுடன் இணைந்து நியாயமான தீர்வுக்காகப் போராடுவேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமை ச்சருமான டக்ளஸ் தேவா னந்தா தெரி வித்துள்ளார்.



தொடர்ச்சி P2



# ஜனாதிபதியுடன் முன்னாள் எம்.பி. சந்திப்பு

ஜனாபதி ரணில் விக்ரமசிங்கவை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரமான மு.சந்திரகுமார் மற்றும் சமத்துவக் கட்சியின் தலைவர் சு. மனோகரன் ஆகியோர் கொழும்பில்சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பின் போது கிளிநொச்சி மாவட்டம் உட்பட வடக்கின் தற்போதைய அரசியல் பொருளாதார நிலைமைகள், பிரதேச அபிவிருத்திபற்றி பேசப்பட்டதோடு, எதிர்கால அரசியல் செயற்பாடுகள் பற்றியும்கலந்துரையாடப்பட்டதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.




# 2,000 கிராம சேவை உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை

நாட்டில் புதிதாக 2,000 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ப்ரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

2024இன் முதல் 2 மாதங்களில்

# 83 கொலைகள்; 20 துப்பாக்கி பிரயோகங்கள்

நாட்டில் இந்த ஆண்டு (2024) இதுவரை மொத்தம் 83 கொலைகள் மற்றும் 20 துப்பாக்கி பிரயோகங்களும் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

2024 இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் பதிவான 76 சம்பவங்களில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது, ஜனவரி முதல் இன்று வரை மொத்தம் 1,180 திருட்டு சம்பவங்களும், 310 கொள்ளை சம்பவங்க ளும் பதிவாகி யுள்ளன.



தொடர்ச்சி P2



இலங்கையில் புதிய கல்வி

# மார்ச் 7ஆம் திகதி வெளியீடு

முன்பிள்ளை பருவ அபிவிருத்தி காலத்திலிருந்து வயது வந்தோர்வரையில் பாலியல் தொடர்பில் கல்வியை வழங்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட புதிய கல்வி வெளியீடுகள் எதிர்வரும் மார்ச் 7ஆம் திகதி வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவத்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன தலைமையில் கூடிய பாராளுமன்ற சிறுவர் ஒன்றியத்திலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்ட இலங்கையில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளை மையமாகக்கொண்டு தனிநபர்களின் பாலியல் கல்வி தொடர்பில் கொண்டுள்ள குறைந்த அறிவைவிருத்தி செய்யும் நோக்கில் இந்த பாலியல் கல்வி வெளியீடுகள் தயாரிக்கப்பட்டிருப்பதாக கல்விஅமைச்சின்அதிகாரிகள் ஒன்றியத்தின் முன்னிலையில் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# மொட்டு எம்.பி இராஜினாமா

அநுராதபுர மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நடிகருமான உத்திக பிரேமரத்ன தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யும் கடிதத்தை பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவிடம் செவ்வாய்க்கிழமை (27) கையளித்துள்ளார்.



தொடர்ச்சி P2



“பொலிஸ் மா அதிபர் நியமனம்:

# அரசியலமைப்பு அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது”

தேசபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு அரசியலமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

இலங்கை– இந்திய அரசை

# கண்டித்து சங்கிலி போராட்டம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

இலங்கை அரசையும், சிறைத் தண்டனையைத் தட்டி கேட்காத இந்திய அரசையும் கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் மனிதச் சங்கிலி போராட்டம் தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை (27) முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழக கடலோரப் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களை இலங்கை கடற்படையானது எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் குற்றம் சாட்டி தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருவது மட்டுமல்லாது, இரண்டாவது முறையாக எல்லை தாண்டும் மீனவர்களுக்கு ஓராண்டு முதல் இரண்டு ஆண்டு சிறைத் தண்டனையும் படகோட்டிகளுக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## “இலங்கை மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்”

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (27) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், “தமிழக மீனவர்களை எந்த விதத்திலும் அவர்களின் எந்தச் செயற்பாட்டிலும் நாங்கள் உள் நுழைவதில்லை. அவர்களுக்கு எதிரான வார்த்தை பிரயோகங்களைக் கூட நாங்கள் கவனமாகக் கையாள்கிறோம். இந்தியா எமக்குத் தேவையான ஒரு நாடு. இந்தியாவை நம்பி இலங்கை மக்கள் இருக்கிறார்கள் இவ்வாறு பல்வேறு சகிப்புத் தன்மையுடன் இந்திய மீனவர்களின் விடயத்தை நாங்கள் கையாண்டு வருகிறோம்.

இருந்தாலும் தமிழக மீனவர்கள் எங்களை ஏதோ ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள் என்ற தொனிப்பொருளில் தான் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்கத் தலைவர் எமரிட் கருத்து அமைந்துள்ளது. அதே போன்று தான் சட்ட விரோதமான மீன்பிடியில் ஈடுபடுகின்ற தமிழக மீனவர்களின் நிலைப்பாடும் அமைந்துள்ளது என தோன்றுகின்றது.

அவரின் உரைக்கு நாங்கள் ஒரு பதிலை வழங்க வேண்டிய நிலை உள்ளது. வட பகுதி கடல் பரப்புக்குள் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை உள்ளது.

திடீர் திடீர் என இலங்கை கடற்படை ஒரு சில படகுகளையும் மீனவர்களையும் கைது செய்கின்றனர். மீனவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள், சில நேரங்களில் படகு அரச உடமையாக்கப் படுகிறது. ஆனால் எந்த மீனவரையும் நீண்ட நாட்களாகச் சிறையில் வைக்காது விடுவித்து வந்தனர். நாங்களும் அதைத்தான் வலியுறுத்துகின்றோம்.

ஆனால், வருகின்ற மீன்பிடி படகுகள் பறிமுதல் செய்யப்பட வேண்டும். 2018ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு மீன் பிடிச் சட்ட வரைபுக்குள் அவர்கள் கையாளப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற நிலையில் தான் ஒரு தடவைக்கு இரண்டு அல்லது மூன்று தடவை அத்துமீறி வருகை தந்ததன் காரணத்தினாலேயே குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இது ஒரு சட்டச் செயல்பாடு. இதில் மீனவர்களாகிய எங்களினால் கூட தலையிட முடியாது. அரசாங்கத்தினாலும் இதில் தலையிட முடியாது.

இலங்கை நாட்டில் உள்ள சட்டம் இலங்கை மக்களுக்கும் பொதுவானது. இங்கு வருகின்ற ஏனைய நாட்டவர்களுக்கும் பொதுவானது. எனவே சட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட ஒரு நடைமுறையை விமர்சிப்பதும் அதற்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுப்பதும் கச்சை தீவைப் புறக்கணிப்பது என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

இராமேஸ்வர விசைப்படகு மீனவ சங்கத் தலைவர் எமரிட் இலங்கை அகதிகள் தொடர்பாகவும் ஒரு கருத்தை முன்வைத்துள்ளார்.

தங்களது வரிப்பணத்தில் அந்த மக்களுக்குச் சோறு போடுவதாகத் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த அகதி முகாமை இந்தியா பராமரித்து வருகிறது. அதனைக் கூட புரிந்து கொள்ளாமல் கருத்தை வெளியிட்டுள்ளார்.

மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணாமல் இடம் பெயர்ந்து தமிழக முகாம்களில் உள்ள மக்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் கருத்தை வெளியிட்டுள்ளார். அவருடைய கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இக்கருத்து தொடர்பாக அரசியல் பிரதிநிதிகள் இந்திய அதிகாரிகளின் கவனத்திற்குக்கொண்டு வர வேண்டும். நான் உடனடியாக இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளின் கவனத்திற்குக்கொண்டு வந்துள்ளேன்.

எனவே, இராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்கத் தலைவர் எமரிட் இலங்கை மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

அவர் மன்னிப்பு கோரத் தவறினால் இந்தியா செய்த தற்போது எமக்கு வழங்கியுள்ள உதவிகளைத் திருப்பி கையளிக்க வேண்டிய நிலை ஏற்படும்” என தெரிவித்துள்ளார்.

## “அரசாங்கத்தின் பலத்தை காட்ட இது நல்லதருணம்”

பேஸ்புக் ஜனாதிபதியும் வாயச்சவடால் ஜனாதிபதியுமே தற்போது வாக்களிப்பின்றி வெற்றிபெற்றுள்ளனர். ஆனால் தேர்தலில் வெற்றி பெற்று ரணில் ஜனாதிபதியாவார். நாட்டின் நெருக்கடியான சூழ்நிலையில் சவால்களை ஏற்றுக்கொண்ட தலைவர் யார் என்பதை இந்நாட்டு மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.


அதன்படி, நாட்டு மக்களின் கோரிக்கையே நாட்டின் சித்தாந்தமாகிறது. வரலாறு நெடுகிலும் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் ஒரு முக்கிய பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு வாக்களித்துள்ளனர். போரை முடிவுக்குக் கொண்டு வர மகிந்தவை கொண்டு வந்தனர், அதை அவர் செய்தார்.

மகிந்தவின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் நாட்டை அபிவிருத்தி செய்யும்படி மக்கள் சொன்னார்கள் அதை அவர் செய்தார். நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காகவே மைத்திரிபால சிறிசேன கொண்டுவரப்பட்டார். அது நடந்ததா இல்லையா என்பதை இந்நாட்டு மக்கள் தீர்மானித்தனர். கோட்டாபய ராஜபக்ஷ தேசியப் பாதுகாப்பை உருவாக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டார். அது நடந்ததா இல்லையா என்பதை மக்கள் முடிவு செய் வார்கள். இம்முறை பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ரணில் விக்ரமசிங்க இந்த முறையை மாற்றுவதாகக் கூறி அதை நிரூபித்த தலைவர். எனவேதான் திரு. ரணில் விக்ரமசிங்கவுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென மக்கள் கருதுகின்றனர்.

தேசிய மக்கள் சக்தி என்பது மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஒரு நாடகம் மட்டுமே. நாங்கள் கூட்டத்தை காலிமுகத்திடலுக்கு கொண்டு வந்து காலிமுகத்திடலை நிரப்பினோம், மக்கள் தானாக முன்வந்து அங்கு வந்தனர். தொடர்ந்து நடந்த உள்ளூராட்சி தேர்தலில் 45% வாக்குகள் கிடைத்தன. ஜனாதிபதி தேர்தலில் 51% வாக்குகள் கிடைத்தன. அலை என்று ஒன்று இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். 5 இலட்சத்தை 50 இலட்சமாக அதிகரிக்க 1,000 சதவீதம் அதிகரிக்க வேண்டும். அரசியல் வரலாற்றில் அப்படிப்பட்டவர் யாரும் இல்லை. ஜே.வி. பி. பற்றி மக்களுக்கு நல்ல புரிதல் உள்ளது. கொலை செய்தாவது ஆட்சியைப் பிடிக்க விரும்புகிறார்கள். அதிகாரத்திற்காக அதிக அடக்குமுறைகளை அவர்களால் செய்ய முடியும். அதிகாரம் கிடைத்ததும் அடக்கி ஒடுக்குவேன் என்றார் லால் காந்த. நிம்மதியாக வாழும் மக்கள் ஒருபோதும் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு அதிகாரத்தைக் கொடுக்க மாட்டார்கள்.

அப்படிச் செய்வது நல்லது. அரசாங்கத்தின் பலத்தைக் காட்ட இது ஒரு சந்தர்ப்பம். அதனை விவாதத்திற்கு எடுத்து மிக விரைவில் வாக்கெடுப்புக்குச் சென்றால் பாராளுமன்றத்தில் தனது பலத்தைக் காட்ட முடியும்.

பொதுஜன பெரமுன அல்ல, வேட்பாளர்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியாது. ரணில் அதைக் கேட்பாரா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது. ரணிலை இந்த நாட்டின் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் ஆக்கியது பொதுஜன பெரமுன தான். அவர் பணியைச் சரியாகச் செய்ததை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே, மொட்டுக் கட்சியாக ரணில் வந்தால் நல்லது என நினைக்கின்றேன். சுயேச்சை வேட்பாளராக வந்தால் இன்னும் நல்லது. அப்போது பயமின்றி தெளிவாக வேலை செய்யலாம். கட்சியின் முடிவு என்னவென்று எனக்குத் தெரியாது. என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன் என்றார்.



## இலங்கைக்கு 2ஆம் இடம்

முதலிடத்தில் இருக்கும் நியூயோர்க்கில் 7.05 டொலருக்கு ஆப்பிள் விற்பனை செய்யப்படுகின்றது.

ஆப்பிள் பழத்தை அதிக விலைக்கு விற்கும் நாடுகளின் பட்டியலில் இறுதி இடத்தில் பாகிஸ்தானின் லாகூர் இருக்கின்றது. இங்கு ஒரு கிலோ கிராம் ஆப்பிள் 1.05 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்படுகின்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரசியலமைப்பு அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது”

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக, இலங்கையின் 36ஆவது பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து டி.எம். டபிள்யூ.டி. தென்னகோன் புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதம், திங்கட்கிழமை (26) பிற்பகல் தேசபந்து தென்னகோனிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

அரசியலமைப்பு பேரவையினால் பொலிஸ்மா அதிபர் நியமனத்தை அங்கீகரிக்கவில்லை. அதற்கு ஆதரவாக 4 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் மற்றும் 2 பேர் வாக்களிப்பதை தவிர்த்தும் இருந்தனர்.

முடிவெடுக்க குறைந்தபட்சம் 5 வாக்குகள் தேவை. வாக்குகள் சமமாகும் போது மாத்திரம் பயன்படுத்தக்கூடிய அறுதியிடும் வாக்கு சபாநாயகருக்கு உள்ளது.

4/2 என்பது சமமான வாக்குகள் அல்ல! இரண்டாவது முறையாகவும் அரசியலமைப்பு அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது.

வெட்கம் சபாநாயகர் அவர்களே! என்று குறிப்பிட்டுள்ளது.

## மொட்டு எம்.பி இராஜினாமா

அதற்கமைய, 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(1)ஆம் பிரிவின் பிரகாரம் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் ஆசனம் வெற்றிடமாகியுள்ளதாக செயலாளர் நாயகத்தினால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர்பதவியை...

யாழில் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை (27) நடைபெற்ற நிகழ்வின் பின்னர், இந்தியத் தூதருடனான சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தியத் தூதுவருடனான சந்திப்பின்போது பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் அல்லது அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்துரையாடியிருந்தேன். அதேநேரம், அன்று நான் கூறியதை சக தமிழ் இயக்கங்கள் கட்சிகள் ஏற்றிருந்தால் இன்று இந்த அழிவுகள் இழப்புகள் அவல நிலைகள் ஏற்பட்டிருக்காது என்பதையும் எடுத்துக் கூறியிருந்தேன்.

சமீபத்தில் ஜே.வி.பியின் தலைவர் இந்தியா சென்று பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பில் பேச்சுக்களை நடத்தியிருந்தார். ஆனாலும், அவர் இலங்கை கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் எவ்விதமான கருத்தையும் எடுத்துக் கூறியிருக்கவில்லை.

அதேபோன்று, சமீபத்தில் யாழில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இந்தியத் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். அச்சந்தர்ப்பத்தில் கூட எமது வடக்கு கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

## 83 கொலைகள்; 20 துப்பாக்கி பிரயோகங்கள்

இந்த வருடத்தில் இதுவரை 83 கொலைகள் மற்றும் 20 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 10 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படுகிறது.

இவ்வாறுநாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை பொலிஸார் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கண்டித்து சங்கிலி போராட்டம்

இந்த நிலையில், அகில இந்திய மீனவர் காங்கிரஸ் தலைவர் ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ தலைமையில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் இலங்கை அரசையும்,
அதைத் தடுக்காத மத்திய அரசையும் கண்டித்து பாம்பன் தெற்குவாடி கடற்கரை பகுதியில் மனிதச் சங்கிலி போராட்டம் நடத்தினர்.

இப்போராட்டத்தில் பல்வேறு மாவட்டத்திலிருந்து காங்கிஸ் கட்சியைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்துகொண்டு இலங்கை அரசுக்கு எதிராகவும், இந்திய அரசுக்கு எதிராகவும் கண்டன கோஷங்களை எழுப்பியிருந்ததை குறிப்பிடத்தக்கது.

## மார்ச் 7ஆம் திகதி...

முன்பள்ளி மாணவர்கள் முதல் 13ஆம் தரம் வரையிலான பாடசாலை மாணவர்கள் வரையிலும், வயதுவந்தவர்களுக்காகவும் இந்த வெளியீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த பாலியல் கல்வி வெளியீடுகள் கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்களின் முழுமையான மேற்பார்வை மற்றும் அவற்றின் அனுமதியுடன் துறைசார்ந்த நிபுணர்களால் தொகுக்கப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முதல் கட்டத்தின்கீழ் பாலியல் கல்வி தொடர்பான வெளியீடுகள் இலத்திரனியல் வெளியீடுகளாக வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சமூகத்தில் உள்ள அனைத்து வயதினருக்கும் பாலியல் பற்றிய அறிவை முறையாக வழங்குவதன்மூலம், சமூகத்தில் உருவாகி வரும் பல நெருக்கடிகளை களைய முடியும் என்றும் இதன்மூலம் பாடசாலை மாணவ மாணவியரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் அதிகாரிகள் ஒன்றியத்தின் முன்னிலையில் தெரிவித்தனர்.

## 2,000 கிராம சேவை உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை

மேலும், கிராம உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை பெறுபேறுகள், பரீட்சைகள் திணைக்களத்தினால் அரச நிர்வாக அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன.

தகுதி பெற்ற சுமார் 4,000 பேரை நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக கிராம உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படாமையினால் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

.அத்துடன், பணிபுரிந்த சிலர் ஓய்வு பெற்றுள்ளமையினாலும் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## “பண மோசடியில் ஈடுபடுவோர் குறித்து முறையிடுங்கள்”

முறையற்ற வகையில் பணம் கொடுத்து இஸ்ரேலின் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. எவரேனும் அவ்வாறு கூறி பணம் பெற்றிருந்தால் அத்தகையவர்கள் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு தெரியப்படுத்துங்கள். அதன் மூலம் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமெனத் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் விவசாயத்துறைக்காக 39 பேருக்கும், வீட்டு தாதியர்களாக 32 பேருக்கும் விமான பயணச்சீட்டுக்களை வழங்கி வைக்கும் வைபவம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இஸ்ரேலில் விவசாய தொழில் துறையில் 642 பேருக்குத் தொழில் வாய்ப்புகள் கிடைத்துள்ளதுடன், இவ்வருடம் மாத்திரம் வீட்டு தாதியர்களாக 1,102 பேருக்குத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார் மேலும், இஸ்ரேலில் தொழிலுக்குச் செல்பவர்களைத் தடுக்க ஒரு மாஃபியா குழு செயற்பட்டு வந்தது. வெளிநாட்டுத் தொழிலுக்காகச் செல்கின்ற அனைத்து தொழிலாளிகளும் எமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தூதர்களைப் போன்றவர்கள். இலங்கையின் சட்டங்களுக்கும் இஸ்ரேல் சட்டங்களுக்கும் எதிராக அந்த நாட்டில் தங்கியுள்ள எவருக்கும் வேலை வழங்க வேண்டாம் என இஸ்ரேல் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தேன். அவ்வாறு வேலை வழங்கினால் எமது இலங்கையர்கள் எவரையும் வேலைக்கு அனுப்ப மாட்டோம் என்று கூறினேன். இஸ்ரேலிய அரசாங்கம் எனது கோரிக்கையை ஏற்றுத் தொழில் வழங்குவதை நிறுத்தியது.

மாற்றுவழியில் வேறு நபர்களுக்குப் பணம் கொடுத்து தொழிலைப் பெறமுடியாது.

எனவே, அவ்வாறு யாராவது பணம் கொடுத்திருந்தால், இரகசியமான முறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அல்லது எமது அமைச்சின் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்போது நாம் அத்தகைய நபர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்போம் என்றார்.



## அரச ஊழியர் போன்று நடித்து பண மோசடி

■ எப்.முபாரக்

கந்தளாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பல பகுதிகளில் அரச உத்தியோகத்தர் என்று தன்னை அறிமுகப்படுத்தி வயோதிபர்களிடம் அஸ்வெசும திட்டத்தில் தங்களின் பெயர் வந்துள்ளது என்று கூறி பணம் மோசடியில் ஈடுபட்ட ஒருவர் அம்பலமாகியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர் .

குறித்த நபர் கந்தளாய் ஆரியவங்ச மாவத்தை வாத்தியகம வட்டுக்கச்சி மற்றும் லைட்வீதி போன்ற பகுதிகளில் தன் கைவரிசையைக் காட்டியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர் .

தங்களுக்கு அஸ்வெசும திட்டத்தில் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறி இப்பகுதிகளில் நான்காயிரம் மற்றும் ஐந்தாயிரம் ரூபாய் பெற்றுள்ளதாகவும் இவ்விடயம் குறித்து கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் நடமாடியமை தொடர்பாக அப்பகுதிகளில் பொறுத்தப்பட்டுள்ள சிசிடிவியில் பதிவாகியுள்ளதுடன் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# “நிவாரணம் நிச்சயம்”

## அமைச்சர் காஞ்சன சூளுரை



எரிபொருள் விலை சூத்திரத்தில் அரசாங்கத்திற்கு கிடைக்கும் 4 சதவீதம் ஈவுத்தொகையை குறைத்து அந்த நிவாரணத்தை மக்களுக்கு வழங்குவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, “பூஜ்ஜியத்திலிருந்து 4 சதவீதம் வரையான ஈவுத்தொகையைக் குறைப்பதன் மூலம் செலவுகளை மட்டுமே ஈடுசெய்யும் வகையில் விலை சூத்திரத்தை செயல்படுத்த நாங்கள் எதிர்ப்பார்த்துள்ளோம்.

பெற்றோலிய கூட்டுத்தாபனம், LIOC மற்றும் சினோபெக் ஆகியவற்றுடன் போட்டியிட அந்த 4 சதவீதத்தைப் பயன்படுத்த முயற்சிக்கிறோம்.

இவ்வளவு காலமாக எமக்கு இருந்த 4 சதவீதத்தை வைத்து, கடந்த ஆண்டு விலைச்சூத்திரத்தின் ஊடாக பழைய கடன்களையும், வங்கிகளில் வாங்கிய கடன்களையும் ஈடுகட்ட முடிந்தது.

இதன் பயனை மக்களுக்கு வழங்குவதற்காக எதிர்காலத்தில் துரிதமாக செயற்படுவோம் என நம்புகின்றோம்.

தற்போது, அதிகபட்ச சில்லறை விலைக்கான வர்த்தமானி அறிவித்தல் அமைச்சினால் வெளியிடப்படுகிறது. அதன்படி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் LIOC பெரும்பாலும் அந்த அதிகபட்ச விலைக்கு செல்லக்கூடும். சினோபெக் மட்டும் அதை விட குறைவாக விற்கிறது என குறிப்பிட்டுள்ளார்.



### மரண சம்பவத்துடன் தொடர்புடைய

## சந்தேகநபர்க்கு பிணை

■ ஏ.எச் ஹஸ்பர்

கடந்த மாதம் இருபதாம் திகதி (20.01.2024) அக்கரைப்பற்றிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச்சென்ற போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தினால் மோதி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலான பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநருக்கு தலா 1 இலட்சம் ரூபாய் சரீரப்பிணையில் செல்ல கெப்பிட்டிகொல்லாவ நீதவானும், மாவட்ட நீதிபதியுமான அசு காஞ்சன உத்தரவிட்டுள்ளார் .

குறித்த இருவரையும் கடந்த மூன்று கிழமைகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் . திருகோணமலையைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி தி.திருச்செந்தில்நாதன் மற்றும் சதுரங்க ஆகியோர் செய்த பிணை விண்ணப்பதிற்கமைய , நீதவான் சந்தேக நபர்களை எச்சரித்து பிணையில் விடுவித்துள்ளார்.



## ஆணொருவரின் சடலம் மீட்பு

■ துவாரகஷான்

மஸ்கெலியா - டஸ்பி சாமிமலை தோட்டத்தில் ஆணொருவரின் சடலம் செவ்வாய்க்கிழமை (26) மீட்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதே பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடைய குமாரவேல் சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், உயிரிழந்த நபர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என தெரியவந்துள்ளது.

குறித்த நபரின் வீட்டிலிருந்து 50 மீற்றர் தூரம் தொலைவிலிருந்தே சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சடலம் பிரேதப் பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### மாணவன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில்

## உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிப்புரை

யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரியில் தரம் 06இல் இணைந்துக் கொண்ட புதுமுக மாணவன் மீது தரம் 10 மாணவனால் கடந்த 22ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய இந்த விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்குமாறு பாடசாலை அதிபர் மற்றும்



வலயக்கல்வி பணிமனைக்கு கௌரவ ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்படும் அபயம் பிரிவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாணவன் மற்றும் தாக்குதல் மேற்கொண்டதாக கூறப்படும் மாணவன் ஆகியோரிடம் விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளதுடன் , பாதிக்கப்பட்ட மாணவனுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கும் வரை ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்படும் அபயம் பிரிவினால் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என தெரியவந்துள்ளது .

## தவறான உறவால் பெண் கொலை




காலி பிரதேசத்தில் தவறான உறவு காரணமாக பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாதேவல- வந்துரம்ப பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நாதேவல பகுதியில் கிளை வீதியில் பெண் ஒருவர் படுகாயமடைந்து விழுந்து கிடப்பதாக 119 தகவல் மையத்துக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதன்போது, உயிரிழந்த பெண்ணுடன் தவறான உறவில் இருந்து வந்த நபரே இந்தக் கொலையை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

கொலையை செய்த சந்தேக நபரும் விஷம் அருந்தி உயிரை மாய்த்து கொள்வதற்கு முயன்றுள்ளதாகவும், பின்னர் அவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வந்துரம்ப பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


### ஒரு மணித்தியாலத்துக்குள்

## 20,000 ரூபா யாசகம் பெற்ற பெண்

கொழும்பு -ஹைட் பார்க் பகுதியில் மூன்று சிறுவர்களை வைத்து ஒரு மணித்தியாலத்துக்குள் 20 ஆயிரம் ரூபாவை சம்பாதித்ததாக கூறப்படும் யாசகம் எடுக்கும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொம்பனித்தெரு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெண் ஒருவர் இந்த மூன்று சிறுவர்களிடம் நன்கொடையாக பணத்தை வழங்கியுள்ளார்.

இந்த பணத்தை யாசகம் எடுக்கும் பெண், தன்வசம் வைத்து கொண்டதை அவதானித்த நன்கொடை வழங்கிய பெண், இது



தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதன்பேரில் யாசகம் எடுக்கும் பெண் கொம்பனித்தெரு பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் மூன்று சிறுவர்களும் பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபரான யாசகம் எடுக்கும் பெண் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மூன்று சிறுவர்களில் இருவரை மீரிகம பராமரிப்பு இல்லத்தில் வைக்கவும் அடையாளம் காணப்படாத மற்றுமொரு சிறுவனை மொரட்டுவை சிறுவர் காப்பகத்தில் வைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## 10,000 ரூபா வாங்கிய இரு பொலிஸார் கைது

போக்குவரத்து விதிமீறலை மறைப்பதற்காக பத்தாயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் திங்கட்கிழமை (26) கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளனர்.

இத்தபான பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப்



பிரிவின் கான்ஸ்டபிள்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



## மின் கசிவால் வீடு தீக்கிரை

■ எம்.றொசாந்த்

யாழ். புத்தூர் கலைமதி பகுதியில் வீடொன்று தீக்கிரையானதில், பெறுமதியான பொருட்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன தீயில் எரிந்துள்ள சம்பவம் திங்கட்கிழமை (26) இரவு பதிவாகியுள்ளது.

இதனையடுத்து வீட்டார் , அயலவர்களின் உதவியுடன் தீயினை கட்டுப்படுத்த முயன்றபோதும், அது பயனளிக்காததால் யாழ்.மாநகர சபை தீயணைப்பு படையினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, அவர்கள் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

குறித்த தீ விபத்து, மின் கசிவு காரணமாக ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# “தென்னிந்திய நடிகைகளின் வருகை தமிழ்ச் சமூகத்தை போதை மயப்படுத்தும்”

■ எஸ் தில்லைநாதன்

தமிழ் பிரதேசங்களில் தினம் தினம் போதை மரணங்கள் பதிவாகும் அளவுக்கு எமது இளைய தலைமுறை இன்று போதைப்பொருட்களுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறது. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட கையோடு இளைஞர்களை இலட்சியப் பாதைகளிலிருந்து திசை திருப்பும் நோக்கில் போதைப் பொருட்கள் திட்டமிட்டு விநியோகிக்கப்பட்டன.

இன்று அதைக் கைவிட முடியாத அளவுக்குப் போதை பெரும் புற்று நோயாகத் தமிழ்ச் சமூகத்தை அரிக்க ஆரம்பித்து விட்டது. இது போதாது என்று, இப்போது திட்டமிட்டுத் தென்னிந்தியாவிலிருந்து கும்மாள நடிகைகள் வரவழைக்கப்படுகின்றனர். இதுவும் தமிழ்ச் சமூகத்தைப் போதை மயப்படுத்தும் இன்னுமொரு நிகழ்ச்சி நிரலே என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார் .

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை (24 ) மல்லாகத்தில் நடைபெற்றுள்ளதுடன் அதன்போதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார் .

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

“ எமது மக்களின் பொழுது போக்குக்காக என்று சொல்லி இந்தியாவிலிருந்து கும்மாள நடிகைகள் கூட்டிவரப்படுகின்றனர் . ரம்பா, ஊர்வசி, மேனகாக்களைக் கொண்டு முனிவர்களின் தவத்தைக் கலைத்த கதைகள் புராணங்களில் நிறைய உண்டு. இந்தக் கதைகள் இப்போது எம் கண்முன்னே அரங்கேறத் தொடங்கி உள்ளன.

கஞ்சாவும் மாவாவும் ஐஸும் கெரோயினும் மாத்திரம் போதைப்பொருட்கள் அல்ல. மதியை மயக்கும் எல்லாமே போதைகள்தாம் . அந்தவகையிலேயே, எமது இளைஞர்களைக் குறிவைத்து கும்மாள நடிகைகளின் களியாட்ட நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இவை தொடர்ந்து நிகழுவதைத் தவிர்க்கும் முயற்சிகளில் தமிழ்ச் சமூகத்தின் நலனில் அக்கறையுள்ள அனைவரும் ஈடுபடவேண்டும்.

போரினால் பாதிக்கப் பட்ட எமது மக்களின் உள ஆற்றுப்படுத்தலுக்குப் பொழுது போக்குகள் அவசியம். ஆனால், அந்தப் பொழுதுபோக்குகள் பண்பாட்டுச் சீரழிவுக்கு வித்திடுவனவையாக இருக்கக் கூடாது. பண்பாடு என்பது ஒரு இனத்துக்குத் தனித்துவமான , அந்த இனம் தன்னை யார் என்று உணர்ந்து கொள்ளவும், மற்றவர்களுக்குத் தன்னை



யார் என்று அடையாளப்படுத்தவும் கூடிய ஒரு வாழ்க்கை முறை. இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கின்ற நாம் எமது இனத்தின் பண்பாட்டு அடையாளங்களை எந்தக் கேளிக்கைகளின் பொருட்டும் இழந்து விடக்கூடாது. நாமும் நமக்கென்று பல கலைகளைக் கொண்டிருக்கிறோம். அவற்றை மேடையேற்ற உணர்வுள்ள பணம் படைத்தவர்கள் முன்வரவேண்டும் “ என தெரிவித்துள்ளார்.

# கருத்துக்கணிப்புகளின் முடிவுகள் உண்மையானவையா?

வழமையாக தேர்தல் நெருங்கும் காலப்பகுதியில், களநிலைவரங்களை மேலும் சூடுபிடிக்கச் செய்வதற்காகவும், மக்கள் மத்தியில் ஒருவித பேசு பொருளை ஏற்படுத்தச் செய்யும் வகையிலும் கருத்துக் கணிப்புகள் முன்னெடுக்கப்படுவது வழமை.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் கருத்துக்கணிப்புகளின் பிரகாரம் குறித்த போட்டியாளர் குறிப்பிட்ட சதவீத வாக்குகளுடன் முன்னிலையிலும், குறித்த இதர போட்டியாளர் குறிப்பிட்ட சதவீத வாக்குகளையும் பெற்றிருப்பதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிடுவது வழமை.

இவ்வாறான கருத்துக்கணிப்புகள் உண்மையில் எதற்காக முன்னெடுக்கப் படுகின்றன? ஏன் இதற்கான தேவை நிலவுகின்றது? இவை மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றவா எனப் பார்த்தால், உண்மையில் இவ்வாறான கருத்துக் கணிப்புகள் பெரும்பாலும் சுயாதீனமான தரப்புகளால் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்பட்டாலும், அவற்றின் பின்னால் அரசியல் கட்சியின் ஆதிக்கம் பெரும்பாலும் இருக்கும்.

மக்கள் மத்தியில் தாம் ஆதரவளிக்கும் வேட்பாளருக்குக் காணப்படும் செல்வாக்கை மேலும் அதிகரிக்கச் செய்யும் நோக்கில் இவ்வாறான கருத்துக் கணிப்பு பெறுபேறுகளை வெளியிடுவது வழமை.

இவ்வாறான நடத்தை இலங்கையில் மாத்திரமன்றி, சர்வதேச ரீதியிலும் பல காலங்களாகத் தொடர்கின்றன. இந்த கருத்துக் கணிப்புகளால் உண்மையில் பொதுமக்களின் தெரிவில் பெருமளவில் மாற்றம் ஏற்படுத்தப்படுவதில்லை. ஏனெனில், தாம் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில் அவர்கள் பெரும்பாலும் தீர்மானத்துடனே இருப்பார்கள். இந்நிலையில், இவ்வாறான கருத்துக்கணிப்புகளின் முடிவுகள் வெளியாகி, அவற்றால் அவர்களின் தீர்மானங்களில் மாற்றத்தைத் தோற்றுவிக்காது.

ஆனாலும், வாக்கைப் பயன்படுத்தக்கூடாது அல்லது வாக்களிக்கச் செல்லக்கூடாது எனும் சிந்தனையில் இருப்பவர்களை வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்வதற்குத் தூண்டும் ஒரு அம்சமாக இந்த கருத்துக் கணிப்பு முடிவுகள் அமைந்திருக்கும். ஏனெனில், இறுதி முடிவில் தமது வாக்கும் தாக்கம் செலுத்தும் எனும் ஒரு மனப்பான்மை அந்த வாக்காளரிடம் ஏற்படும். இதனால் தேர்தல் வாக்களிப்பு தினத்தன்று, வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று தமது வாக்கை இடும் தேசிய கடமையை நிறைவேற்றும் மனநிலையைப் பெறுவார். இதன் காரணமாக இந்த கருத்துக் கணிப்பு ஒரு விதத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்த கருத்துக்கணிப்புகளின் இறுதி முடிவுகள் உண்மையைப் பிரதிபலிக்காது என்பதற்கான கடந்த கால சிறந்த உதாரணங்களாக, 2016 ஆம் ஆண்டில் அமெரிக்கத் தேர்தல் முடிவுகள், இரு தசாப்த காலப்பகுதிக்கு முன்னர் இந்தியாவின் லோக் சபா தேர்தல் முடிவுகள், ஐக்கிய இராச்சியத்தின் பிரெக்சிட் தீர்மான முடிவுகள் போன்றன அமைந்துள்ளன.

இவ்வாறிருக்க இலங்கையில் தேர்தல்கள் நெருங்கி வருவதால், எதிர்வரும் காலங்களில் இது போன்ற கருத்துக் கணிப்புகள் பல இடம்பெறும். அவற்றை முன்னெடுப்பவர்கள் யார்? அவர்களின் பின்புலம் என்ன? போன்ற கேள்விகளைக் கேட்டு, பதில் தேடினால் அந்த கருத்துக் கணிப்புகளின் முடிவுகள் எந்தளவுக்குச் சரியானவை என்பதை ஊகித்துக் கொள்ள முடியும். சரி, இலங்கையில் எப்போது, எந்தத் தேர்தல் நடக்கும் விரைவில் தெரியவரும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனோ சக்தி பிரதானமானது.

நல்லன ஏதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

நன்றி- பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஜனாபதி தேர்தல் பற்றிய பேச்சுக்கள் ஓடாத குதிரைக்கான பந்தயமா?



எம்.எஸ்.எம்.ஐயூப்

சிங்கள மக்கள் எதனையும் இரண்டு வாரங்களில் மறந்துவிவார்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுபிள்ளை பிரபாகரன் கூறியதாக சிங்களத் தலைவர்கள் அடிக்கடி கூறுவார்கள். அவர் எப்போது எங்கு அதனைக் கூறினார் என்று எவரும் கூறுவதில்லை. எனினும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிங்களவர்கள் மட்டுமன்றி, நாட்டில் அனைவரும் எதனையும் இரண்டு வாரங்களில் மறந்து விடுவதாக நினைத்துக் கொண்டே செயற்படுகிறார் போலும். அதனால் தான் அவர் அடிக்கடி முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். இனப் பிரச்சினை தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துக்களை நாம் பல கட்டுரைகளில் சுட்டிக்காட்டி இருந்தோம்.

2023 சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக 2022 நவம்பர் மாதம் அவர் வரவு-செலவு திட்ட விவாதத்தின்போது கூறினார். மக்கள் அதனை மறந்து விட்டதாக நினைத்தோ என்னவோ 2023 தைப்பொங்கல் அன்று இரண்டு வருடங்களில் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்குவதாகக் கூறினார். மீண்டும் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு 2023ஆம் ஆண்டு இறுதிக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் கூறினார். ஜூலை மாதம் இந்தியாவுக்கு செல்லும்முன் மீண்டும் 13ஆவது திருத்தத்தைப் பற்றிய வாக்குறுதியொன்றை வழங்கினார்.

இதைப்போல், கடந்த வருடம் நவம்பர் 13ஆம் திகதி வரவு-செலவு திட்டத்தைப் பாராளுமன்றத்தில் முன்வைத்து உரையாற்றும்போது, 2024இல் ஜனாதிபதி தேர்தலும், பொதுத் தேர்தலும் நடைபெறும் எனக் கூறினார். ஒன்பது நாட்களுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றிபோதே அவ்வாறு கூறினார்.

அவரை நம்பி ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவும் அந்த இரண்டு தேர்தல்களும் இவ்வாண்டு நடைபெறும் என்று இம்மாதம் 6ஆம் திகதி ஊடகவியலாளர்களிடம் கூறினார். ஆனால், அவரது கூற்றை மட்டுமல்லாது அதற்கு முன்னர் ஜனாதிபதி தெரிவித்த கருத்தையும் மறுத்து இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் மட்டுமே நடைபெறும் என்றும் அதற்கு மட்டுமே வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி செயலகம் அறிக்கையொன்றின் மூலம் கூறியது. அடுத்த பொதுத் தேர்தல் 2025 ஆண்டே நடைபெறும் என்றும் அதற்கு அடுத்த வரவுசெலவு திட்டத்தின் மூலமே நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டு இருந்தது. தேர்தல்களை நடத்தும் பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழவிடமே இருப்பதாகவும் அவசியம் ஏற்பட்டால் அதுதொடர்பாக ஜனாதிபதி செயலகம் அவ்வாணைக்குழுவுடன் தொடர்புகொள்ளும் என்றும் அறிக்கை மேலும் கூறியது.

ஜனாதிபதி அலுவலகத்தின் அறிக்கையில் புதிதாக எதுவும் இல்லை. சாதாரண சட்டத்தையே அது குறிப்பிட்டு இருந்தது. அரசியலமைப்பின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அவர் தேர்தல்கள் விடயத்தில் தலையிடாது இருந்தால் தேர்தல்கள் ஆணைக்குழுவே தேர்தல் தினத்தை நிர்ணயிக்கும். அரசியலமைப்பின் 19, 20 மற்றும் 21ஆவது திருத்தங்களின் படி ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும். இறுதியாக 2019 நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலும் 2020 ஒகஸ்ட் மாதம் பொதுத் தேர்தலும் நடைபெற்றது. எனவே, ஜனாதிபதி தலையிடாவிட்டால் இவ்வருடம் ஜனாதிபதத் தேர்தலும் அடுத்த வருடம் பொதுத் தேர்தலும் நடைபெறவேண்டும். ஆனால், ஜனாதிபதி தலையிட்டு பாராளுமன்றத்தின் பதவிக் காலம் முடியும் முன் அதனைக் கலைத்து விட்டால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே பொதுத் தேர்தலை நடத்த வேண்டிய நிலை ஏற்படலாம். இவ்வருடத்தில் ஒரு தேர்தலுக்கு மட்டும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளமையே அதற்குள்ள ஒரே தடையாகும். ஏனெனில், ஒரு தேர்தலுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அலுவலகமே கூறுகிறது.

இவ்வருடம் ஒரு தேர்தலை நடத்த மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவும் தகவலறியும் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலாகத் தெரிவித்துள்ளது. அந்நிதி ஜனாதிபதித் தேர்தலுக்கே உபயோகிக்க வேண்டும் ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கச் சட்டத்தில் இடமில்லை. அதனைப் புறக்கணித்து ஜனாதிபதி பாராளுமன்றத்தை இவ்வருடத்திற்குள் கலைத்தால் அரசியல் நெருக்கடியொன்று உருவாகும் ஆபத்து இருக்கிறது.

விந்தையான விடயம் என்னவென்றால் நிதியமைச்சர் என்ற வகையில், இந்த வருடத்தில் ஒரு தேசிய மட்ட தேர்தலை மட்டும் நடத்துவதற்காக வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்த ஜனாதிபதி ரணில் இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகிய இரண்டும் நடைபெறும் என்று தமது வரவுசெலவுத் திட்ட உரையிலேயே குறிப்பிட்டு இருந்தமையாகும். அதனை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் கவனிக்கவில்லைபோலும். ஜனாதிபதிக்கு மட்டுமே இந்த முரண்பாட்டை விவரிக்க முடியும்.

ஆனால், ஜனாதிபதியின் மீதான தமது விசுவாசத்தை வெளியிடுவதைப் போல் இந்த முரண்பாட்டைத் தீர்க்க ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன மேற்படி தமது ஊடகவியலாளர் மாநாட்டின் போது முன்வந்தார். ஒருதேர்தலுக்கு 1000 கோடி ரூபா தேவை என்றாலும் நாட்டு நிலைமையைக் கருத்திற்கொண்ட ஒதுக்கப்பட்ட 1000 கோடி ரூபாவைக் கொண்டு இரண்டு தேர்தல்களையும் சமாளித்து நடத்த வேண்டும் என்று அவர் கூறினார். ஒன்பது நாட்கள் தான் சென்றடைந்தது,

ஒரு தேர்தலுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே, ஜனாதிபதித் தேர்தல் மட்டுமே இவ்வருடம் நடைபெறும் என்றும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது.

தேர்தல்களுக்கு நிதி வழங்குவது தொடர்பான மற்றுமொரு பிரச்சினையும் அரசாங்கத்தின் தலையில் விழகாத்திருக்கிறது. கடந்த வருடம் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறவிருந்து அரசாங்கம் நிதிவழங்காமையால் நடத்த முடியாமல் போய்விட்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டனவேயன்றி, இரத்துச் செய்யப்படவில்லை. அத்தேர்தல்களை ஒத்திவைக்கக் கட்டளையிடுமாறு கோரி ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். அவ்வாதிகாரி அண்மையில் உயிரிழந்தார்.

அவருக்குப் பதிலாக மற்றொருவரை மனுதாரராக ஏற்றுக் கொண்டு வழக்கைத் தொடரவேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பாக நீதிமன்றம் இன்னமும் தீர்ப்பு வழங்கவில்லை. அது நிராகரிக்கப்பட்டால் அல்லது அது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் வழக்கு தோல்வியடைந்தால் தேர்தலை நடத்த வேண்டியநிலை ஏற்படலாம் அப்போது மீண்டும் நிதிப் பிரச்சினை எழலாம்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான நிதியைத் தடுத்து வைத்துக்கொள்ளக்கூடாது என்று நீதிமன்றம் கடந்த வருடம் மார்ச் மாதம் 3ஆம் திகதி நிதியமைச்சரின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்தது. அச்செயலாளர் அத்தரவை நிதியமைச்சரான ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தார். ஜனாதிபதி அந்நீதி மன்ற உத்தரவைப் பொருட்படுத்தாமல் இருக்கிறார். அது நீதிமன்றத்தை அவமதிப்பதாகும். ஆனால் அது தொடர்பாக எவரும் இது வரை நீதிமன்றம் செல்லவில்லை.

அமெரிக்காவில் போல் வருடத்தில் குறிப்பிட்டதோர் நாளில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று இலங்கையில் சட்டம் இல்லை. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் நடத்தப்படவேண்டும் என்று இந்நாட்டு சட்டத்தில் பொதுவாக இருந்தபோதிலும், ஜனாதிபதி நினைத்தால் அதனையும் மாற்ற அவருக்கு அரசியலமைப்பால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றம் முதலாவதாகக் கூடிய நாளிலிருந்து இரண்டரை ஆண்டுகள் சென்றடைந்ததன் பின்னர் ஜனாதிபதி நினைத்தால் பாராளுமன்றத்தைக் கலைத்து புதிதாக பொதுத் தேர்தலை நடத்த முடியும். தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவர் தமது பதவிக் காலம் முடிவடையும்முன் இரண்டாவது முறையாகத் தேர்தலில் போட்டியிட விரும்பினால் அவரது பதவிக் காலத்தில் நான்கு ஆண்டுகள் முடிவடைந்ததன் பின்னர் புதிதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும். ஜனாதிபதிகள் அந்த அதிகாரத்தைப் பாவித்து தமது கட்சிக்குச் சாதகமான சந்தர்ப்பத்தைப் பாரத்துத் தேர்தல்களை நடத்துகிறார்கள். இது எந்த வகையிலும் ஜனநாயகமல்ல.


ஜே.ஆர்.ஜயவர்தன 1978ஆம் ஆண்டிலேயே முதலாவதாக ஜனாதிபதியாகப் பதவியேற்றார். எனவே 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம் 1984ஆம் ஆண்டிலேயே அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டியிருந்தது.

இதற்கிடையே ஜே.ஆரின் பிரதான அரசியல் எதிரியான சிரிமா பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமை 1980ஆம் ஆண்டு ஏழாண்டுகளுக்கு இரத்துச் செய்யப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து ஜே ஆர். 1982ஆம் ஆண்டிலேயே (உரிய காலத்துக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னரே) தேர்தலை நடத்தி மீண்டும் ஜனாதிபதியானார்.

தற்போது அரசியல் களத்தில் எதிர்க்கட்சிகள் முன்னணியில் இருக்கும் நிலையில் தேர்தல்களை ஒத்திப் போடுவதற்காக அதுபோன்ற சூழ்ச்சிகள் இடம்பெறலாம். அச்சூழ்ச்சி எதுவாக இருக்கும் என்பதை எவராலும் முன்கூட்டியே கூற முடியாது. சிலவேளை நாட்டில் பாரியளவில் வன்செயல்கள் வெடிக்கலாம், இனக் கலவரங்களும் வெடிக்கலாம்.

## கடிதங்கள்

### யானை வேலிகள் அமையுங்கள்



முல்லைத்தீவு - மன்னாகண்டல், முத்தையன்கட்டு காடுகள் வழியாகப் புதுக்குடியிருப்பு மேற்கு பகுதிக்குள் நுழைகின்ற யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதுக்குடியிருப்பு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 1,947 குடும்பங்கள் வாழ்கின்ற புதுக்குடியிருப்பு மேற்கில் சுமார் 105 ஏக்கர் வயல் நிலம் உள்ளது. இவ்வாண்டு காலபோகத்தில் நோய்கள் நெல்லினை அழித்ததை விட மன்னாகண்டல் முத்தையன்கட்டு காடுகள் வழியாக வந்த யானைகள் நெற்பயிர்களைக் கூடுதலாக அழித்துள்ளன.

புதுக்குடியிருப்பு மேற்கில் உள்ள வயல் நிலங்களைப் பாதுகாப்பதற்குப் பயிர்ச் செய்கை காலங்களில் யானை வேலிகள் அமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, தற்போது குடிமனைகளுக்குள் வருகை தரும் யானைகள் 2010ஆம் ஆண்டின் பின்னர் நாட்டப்பட்ட தென்னை மரங்களை அழிப்பதன் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தினை நாசப்படுத்தி வருகின்றது.

- நடராசா கிருஸ்ணகுமார்



# தங்க முலாம் பூசிய கேக்: நடிகைக்கு கிடைத்த பரிசு

பிரபல பொலிவூட் நடிகையான ஊர்வசி ரௌட்டாலா தமிழில் ‘லெஜண்ட்’ என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். அண்மையில் இவர் தனது பிறந்தநாளை கொண்டாடினார்.

இதன்போது ஊர்வசி ரௌட்டாலா மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள 24 கேரட் தங்க முலாம் பூசப்பட்ட கேக்கை வெட்டினார். இந்த கேக்கை பிரபல பாடகர் யோ யோ ஹனி சிங் அவருக்குப் பரிசளித்து உள்ளார்.

பாடகர் யோ யோ ஹனி சிங்குடன் இணைந்து ஒரு மியூசிக் ஆல்பத்தில் ஊர்வசி ரௌட்டாலா பாடிய நிலையில், இந்த தங்க கேக்கை அவர் பரிசளித்துள்ளார்.

இதனையடுத்து, பாடகர் ஹனி சிங்குக்கு தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஊர்வசி ரௌட்டாலா நன்றி தெரிவித்துள்ளார்.

தங்க கேக் குறித்து யோ யோ ஹனி சிங் கூறியபோது ‘என்னை பொறுத்தவரை ஊர்வசி உலகிலேயே மிக அழகான பெண், அதை நான் பலமுறை அவரிடமே கூறியிருக்கிறேன், அவர் மிகவும் அழகான பெண் என்பதால்தான் அவருக்கு நான் மூன்று கோடி மதிப்புள்ள தங்க கேக்கை பிறந்தநாளுக்குப் பரிசாக அளித்துள்ளேன்’ என்று தெரிவித்துள்ளார்.




# தனுஷ் படத்தில் இணைந்த புதிய நாயகி

தனுஷ் நடித்து இயக்கி வரும் ‘ராயன்’ படத்தின் படப்பிடிப்பு அண்மையில் முடிவடைந்த நிலையில் இந்த படத்தில் முக்கிய கேரக்டர்களில் நடித்த எஸ்ஜே சூர்யா, செல்வராகவன், பிரகாஷ் ராஜ் ஆகியோர்களின் போஸ்டர்களை தனுஷ் வரிசையாக வெளியிட்டு வருகிறார்.

அதேபோல் இந்த படத்தில் நாயகிகளாக நடித்த துஷாரா விஜயன், அபர்ணா பால முரளி போஸ்டர்களையும் கடந்த இரண்டு நாட்களாக தனுஷ் வெளியிட்டார்.

இந்த நிலையில் அடுத்த கட்டமாக இந்த படத்தில் நடிகை வரலட்சுமி சரத்குமாரும் நடித்துள்ளதாகக் கூறியுள்ள தனுஷ், அவருடைய போஸ்டரையும் வெளியிட்டுள்ளார்.

சன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில், ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் உருவாகி வரும் இந்த படம் தனுஷின் 50ஆவது படம் என்பது குறிப்பிடத்தக்கது.




# ‘டபுள் டக்கர்’

மகதி இயக்கத்தில் தீரஜ், ஸ்மிருதி வெங்கட் முதன்மையான வேடங்களில் நடித்துள்ள படம் ‘டபுள் டக்கர்.’

வித்யாசாகர் இசையமைத்துள்ள இந்த படத்தில் எம்.எஸ்.பாஸ்கர், கோவை சரளா, யாஷிகா ஆனந்த், காளி வெங்கட், முனிஷ் காந்த் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்தியாவில் முதல் முறையாக அனிமேஷன் கதாபாத்திரங்கள் கொண்ட படமாக இப்படம் உருவாகியுள்ளதுடன், இப்படத்தில் ரஜினிகாந்த் உள்ளிட்ட சில அனிமேஷன் கதாபாத்திரங்கள் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், அண்மையில் வெளியான இந்த படத்தின் டீசர் இலட்சக்கணக்கான பார்வையாளர்களை கடந்துள்ளது.



# வேற லெவலில் சிம்பு

தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில், கமல்ஹாசனின் தயாரிப்பில் ‘எஸ்டிஆர் 48’ என்ற படத்தில் நடிகர் சிம்பு நடித்து வருகின்றார்.

படத்தின் ஆரம்பகட்ட பணிகள் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்த நிலையில், திடீர் என இந்த படத்தின் வீடியோவை சிம்பு தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார். ஹொலிவூட் படத்துக்கு இணையாக கிராபிக்ஸ் காட்சிகளுடன் சிம்பு அறிமுகம் ஆகும் காட்சிகளைக் கொண்ட இந்த வீடியோ சிம்பு ரசிகர்களுக்கு மிகப்பெரிய விருந்து ஆக அமைந்துள்ளது.



# வளைகுடா நாடுகளில் தடை செய்யப்பட்ட ‘ஆர்ட்டிகள் 370’



நடிகை பிரியாமணி முக்கிய கேரக்டரில் நடித்திருந்த ‘ஆர்ட்டிகள் 370’ படத்துக்கு இந்தியப் பிரதமர் மோடி பாராட்டிய நிலையில், இந்தப் படத்துக்கு வளைகுடா நாடுகளில் தடை விதிக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

நடிகை பிரியாமணி மற்றும் யாமி கவுதம் முக்கிய கேரக்டர்களில் நடித்த ‘ஆர்ட்டிகள் 370’ என்ற திரைப்படம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது.

ஜம்மு -காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய சட்டப்பிரிவு 370 இரத்து செய்யப்பட்டமை குறித்த கதை அம்சம் கொண்ட இந்த படம், இந்தியாவிலும் வெளிநாட்டிலும் நல்ல வரவேற்பை பெற்று வசூலையும் வாரி குவித்து வருகிறது.

இந்த நிலையில் ‘ஆர்ட்டிகள் 370’ திரைப்படத்தை தடை செய்வதாக வளைகுடா நாடுகள் அறிவித்துள்ளது. இந்த படத்தில் சர்ச்சைக்குரிய காட்சிகள் இருப்பதால் தடை செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு வசிக்கும் இந்திய மக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.



# பளுதூக்குதல் போட்டியில் வவுனியா மாணவிகள் சாதனை

க. அகரன்

2024ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட பளுதூக்குதல் போட்டி காலி போத்திவெல தேசிய பாடசாலையில் இம் மாதம் 23,24,25 ஆகிய தினங்களில் நடைபெற்றதுடன், இதன்போது வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகள் இரு தங்கப்பதக்கங்களும், ஒரு சில்வர் பதக்கமும், ஒரு வெண்கல பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

இதன் போது பா.கிசாளினி 49 கிலோ எடை பிரிவில் 80 கிலோ எடையைதூக்கி முதலாம் இடத்தையும் த.வன்சிகா 64 கிலோ எடை பிரிவில் 44 கிலோ தூக்கி முதலாம் இடத்தையும், க.அபிசாளினி 81கிலோ எடைபிரிவில் 70 கிலோ தூக்கி இரண்டாம் இடத்தையும், ச.அனுஷா 59 கிலோ எடைபிரிவில் 61 கிலோஎடையை தூக்கி மூன்றாம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கும், மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளதுடன், ஞானஜீவன் ஆசிரியர் இவர்களிற்கு பயிற்சியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







# பாலர் பாடசாலையின் விடுகை விழா

அபு அலா

புத்தளம் - முதளைப்பாழி அல் மினா மும்மொழி பாலர் பாடசாலையின் விடுகை விழா வெள்ளிக்கிழமை (23) முதளைப்பாழி முஸ்லிம் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளர் இஸட்.ஏ.தௌபீக் தலைமையில், இடம்பெற்ற இவ்விழாவுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைத்துள்ளார்.



# யாதுமானவள் நிகழ்வு

எம். எஸ். எம். நூர்தீன்





சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் யாதுமானவள் ஊக்கமளிக்கும் பேச்சு, பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணனினால் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இராசதுரை அரங்கில் வெள்ளிக்கிழமை(23) இடம்பெற்றது.









# கர்ப்பிணிகளுக்கான விழிப்புணர்வு செயலமர்வு

வி.ரி.சகாதேவராஜா

கல்முனை ஆதார வைத்தியசாலையில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்றது.

இந்நிகழ்வில் மருத்துவ அதிகாரிகள், தாதிய பரிபாலகர், தாதிய பரிபாலகி, தாதிய உத்தியோகத்தர்கள், குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.



# உபகரணங்கள் வழங்கிவைப்பு

எப்.முபாரக்

கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தி/அல் தாரீக் மகா வித்தியாலயத்தின் பயன்பாட்டிற்காக வேண்டி பழைய மாணவர்கள் சங்கத்தினால் மனையியல் அறைக்கான ஒரு தொகுதி உபகரணங்களை பாடசாலை அதிபர் எம்.ஏ.எம்.கியாஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது .

அமெரிக்கா

# “காசாவில் போர் நிறுத்தம் ஏற்படும்”



இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையேயான போரில் காசாவில் உள்ள மக்கள் பெரும் தவிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இஸ்ரேல் தாக்குதலில் காசாவில் குழந்தைகள், பெண்கள் உட்பட பலியானோர் எண்ணிக்கை 29 ஆயிரத்தைக் கடந்துள்ளது. ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச்சென்ற இஸ்ரேல் பிணைக்கைதிகளை மீட்க 7 நாள் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் இஸ்ரேல் தீவிர தாக்குதல் நடத்திவருகிறது.

இதற்கிடையே, காசாவில் போர் நிறுத்தத்தைக் கொண்டுவர அமெரிக்கா, கத்தார், எகிப்து ஆகிய நாடுகள் முயற்சித்து வருகின்றன.

இதில் ஹமாஸின் கோரிக்கைகளை ஏற்க இஸ்ரேல் மறுத்தது. இதனால் போர் நிறுத்தம் ஏற்படுவதில் இழுபறி நீடித்து வருகிறது.

இந்நிலையில், காசாவில் மார்ச் 4ஆம் திகதிக்குள் போர் நிறுத்தம் ஏற்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர், “காசாவில் போர் நிறுத்தம் ஏற்படுவதில் நெருக்கமாக இருக்கிறோம் என்று எனது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்னிடம் தெரிவித்தார். அடுத்த திங்கட்கிழமைக்குள் (மார்ச் 4ஆம் திகதி) போர் நிறுத்தம் ஏற்படும் என்று நம்புகிறேன்” என தெரிவித்துள்ளார்.


பலஸ்தீனம்

## பலஸ்தீன பிரதமர் திடீர் இராஜினாமா

பலஸ்தீனர்கள் வசிக்கும் காசா பகுதியில் உள்ள ஹமாஸ் படைக்கு எதிராக இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்நிலையில், பலஸ்தீனத்தில் திடீர் திருப்பமாக அந்நாட்டு பிரதமர், பதவியை இராஜினாமா செய்வதாக முகமது ஷ்டய்யே அறிவித்ள்ளார்.

பலஸ்தீனத்தில் தனது தலைமையிலான அரசை கலைத்துவிட்டு புதிய அரசு பொறுப்பேற்க பிரதமர் முகமது ஷ்டய்யே விருப்பம் தெரிவித்துள்ளார். இதையடுத்து, பலஸ்தீன ஜனாதிபதி மகமூத் அப்பாசிடம் தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர், “காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தொடர் தாக்குதல் எதிரொலியாக இந்த முடிவை எடுத்துள்ளேன். காசாவில் போர் முடிவுற்ற பின், அதற்குப் பிந்தைய சூழலில் பலஸ்தீனியத்தை நிர்வகிக்க புதிய அரசு அமைவதே சிறந்ததாக இருக்கும்” என தெரிவித் துள்ளார்.



பாகிஸ்தான்

## போத்தல் மூடிகளை தலையால் திறந்து கின்னஸ் சாதனை

பாகிஸ்தானை சேர்ந்த, முகமது ரஷீத் என்பவர் போத்தல் மூடிகளை தலையால் திறந்து புதிய உலக சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

இதன்படி, மேசை ஒன்றின் முனை பகுதியில் போத்தல்களை இறுக பிடித்து கொண்டு திறமையாக, அதன் மூடிகளை அவருடைய தலையால் விரைவாக முட்டி, நீக்குகிறார்.

போத்தல்களை ஒன்றன் பின் ஒன்றாக அவருடைய உதவியாளர்கள் அனுப்பி கொண்டே இருக்கின்றனர். அதிவேகத்தில் இந்த போத்தல்களின் மூடிகளை நீக்கும் செயலை தலையால் செய்து ரஷீத் சாதனை படைத்திருக்கிறார்.

அவர் மொத்தம் 77 போத்தல் மூடிகளை ஒரு நிமிடத்தில் நீக்கியுள்ளார். கடந்த 2023ஆம் ஆண்டு பெப்ரவரியில் இந்த சாதனையை அவர் படைத்திருக்கிறார். எனினும், இந்த வீடியோ இன்ஸ்டாகிராமில் சமீபத்தில் பகிரப்பட்ட உடன் 17 இலட்சம் பேர் அதனை பார்வையிட்டு உள்ளனர். பலரும் விமர்சனங்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

கடந்த 2020ஆம் ஆண்டு இந்திய தற்காப்பு கலை நிபுணரான பிரபாகர் ரெட்டி என்பவர், ஒரு நிமிடத்தில் 68 போத்தல் மூடிகளை நீக்கியதே அப்போது சாதனையாக இருந்தது.



இலங்கையில் இருந்து

## 6 மீனவர்கள் தமிழகம் திரும்பினர்

தமிழக மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்கும்போது எல்லை தாண்டி வந்ததாக கூறி அவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், அவர்களின் மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்ந்து நிகழ்கிறது. இவ்வாறு கைது செய்யப்படும் மீனவர்கள், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நிபந்தனைகளுடன் விடுவிக்கப்படுகின்றனர். தொடர்ந்து கைது செய்யப்பட்டால் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

அந்தவகையில், சமீபத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட 6 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் இந்திய தூதரகம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு கொழும்பில் இருந்து விமானம் மூலம் செவ்வாய்க்கிழமை (27) சென்னை வந்து சேர்ந்தனர்.

அக்பர்– சீதா சிங்கம் வழக்கு

திரிபுரா

## தலைமை வனப் பாதுகாவலர் இடைநீக்கம்

அக்பர் என்ற ஆண் சிங்கத்திற்கும், சீதா என்ற பெண் சிங்கத்திற்கு வேறு பெயர் வைக்குமாறு மேற்கு வங்க அரசிற்கு அம்மாநில உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், இவ்வழக்கு தொடர்பாக திரிபுரா மாநிலத்தின் தலைமை வனப் பாதுகாவலர் பிரபின் லால் அகர்வாலை அம்மாநில அரசு இடைநீக்கம் செய்துள்ளது.

‘சீதா’ சிங்கம் மற்றும் ‘அக்பர்’ சிங்கத்தை ஒரே இடத்தில் அடைப்பது இந்து மதத்தை அவமதிக்கும் விடயம் என விஷ்வ இந்து பரிஷத் மேற்குவங்க உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது.

அவ்வழக்கின் விசாரணையில், திரிபுரா உயிரியல் பூங்கா அதிகாரிகள் தான் இந்த சிங்கங்களுக்கு பெயர் இட்டுள்ளனர் என்று தெரிவித்தது.

இந்நிலையில், அக்பர், சீதா பெயர் வைக்கப்பட்டதற்காக, அம்மாநிலத்தின் தலைமை வனப் பாதுகாவலர் பிரபின் லால் அகர்வாலை அம்மாநில அரசு இடைநீக்கம் செய்துள்ளது.

கேரளா

## “இந்தியாவிற்கு தனி ஆய்வு மையம்”



ககன்யான் திட்டத்தின் கீழ் விண்வெளிக்கு செல்லும் 4 வீரர்களின் பெயர்களை பிரதமர் மோடி அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அவர், இந்த விண்வெளி வீரர்களைச் சந்தித்து அவர்களை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய இந்தியாவின் பெருமை நீங்கள்தான்.

ககன்யான் திட்டம் விண்வெளித்துறையை புதிய உயரத்துக்கு கொண்டு செல்லப்போகிறது. சந்திரயான், ககன்யான் போன்ற விண்வெளிப்பயணங்களில் பெண்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றனர்.

2035க்குள் இந்தியாவில் தயாரிக்கப்படும் ராக்கெட் மூலம் இந்தியர்கள் நிலவில் கால் பதிப்பர். 2035ஆம் ஆண்டுக்குள் விண்வெளியில் இந்தியாவுக்கென தனி ஆய்வு மையம் அமைய உள்ளது” என தெரிவித்துள்ளார்.



தேசிய மட்ட பளுதூக்குதலில்

# வவுனியா பெரிய கோமரசன்குளம் ம.வி மாணவிகள் பிரகாசிப்பு

■ க. அகரன

தேசிய மட்ட பளுதூக்குதல் போட்டியில் வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகள் பிரகாசித்துள்ளனர்.

இப்போட்டியில் பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகள் இருவர் தங்கப் பதக்கமும், ஒரு வெள்ளிப் பதக்கமும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர் .

இதில், பா.கிசாளினி 49 கிலோ கிராம் எடைப் பிரிவில் 80 கிலோ கிராம் எடையைத் தூக்கி முதலாமிடத்தையும், த.வன்சிகா 64 கிலோ கிராம் எடைபிரிவில் 44 கிலோ கிராம் எடையைத் தூக்கி முதலாமிடத்தையும், க.அபிசாளினி 81 கிலோ கிராம் எடைப் பிரிவில் 70 கிலோ கிராமைத் தூக்கி இரண்டாமிடத்தையும், ச.அனுஷா 59 கிலோ கிராம் எடைப் பிரிவில் 61 கிலோ கிராம் எடையைத் தூக்கி மூன்றாமிடத்தையும் பெற்று பாடசாலைக்கும், மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர். ஞானஜீவன் ஆசிரியர் இவர்களுக்கு பயிற்சியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து எதிர் அவுஸ்திரேலியா:

## நாளை ஆரம்பிக்கிறது முதலாவது டெஸ்ட்

நியூசிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது, வெலிங்டனில் நாளை அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கு முக்கியமானதாகக் காணப்படும் இத்தொடரில் வெற்றி பெறுவதற்கு அவுஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வரிசை மேம்பட்ட பெறுபேற்றை வழங்க வேண்டும் என்பதோடு, மர்னுஸ் லபுஷைன் குறிப்பிடத்தக்கதாக ஓட்ட எண்ணிக்கையைப் பெற வேண்டியுள்ளது.

மறுபக்கமாக டரைல் மிற்செல், டெவோன் கொன்வே, றஷின் றவீந்திரவின் உபாதைகள் நியூசிலாந்துக்கு முட்டுக்கட்டையாகவுள்ளது.

## ஓய்வு பெற்ற வக்னர்



உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து தனது ஓய்வை நியூசிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர் நீல் வக்னர் அறிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடரில் தெரிவு செய்யப்பட மாட்டாரென தேர்வாளர்களால் கூறப்பட்டதையடுத்தே தனது ஓய்வை 38 வயதாகும் வக்னர் அறிவித்துள்ளார்.

இதுவரையில் 64 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய வக்னர், 260 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.




## சம்பியனான கண்ணன்குடா மகா வித்தியாலயம்

■ வ. சக்தி

மட்டக்களப்பு-கோட்டமுனை விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையில் மண்முனை மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை களுக்கிடையிலான 15 வயதுக்குட்பட்ட மாணவருக்கான மென்பந்தாட்டத் தொடரில் கண்ணன்குடா மகா வித்தியாலயம் சம்பியனானது.

மாணவர்களுக்கிடையில் கிரிக்கெட் திறனை பரீட்சிப்பதற்கான களமாக அமைந்த கண்ணன்குடா மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற 10 ஓவர்களைக் கொண்ட இத்தொடரில் ஏழு பாடசாலைகள் பங்கேற்றிருந்த நிலையில் கரையாக்கன் தீவு விநாயகர் பாடசாலையை வென்றே கண்ணன்குடா மகா வித்தியாலயம் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்ணன்குடா மகா வித்தியாலயம் 10 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 125 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கரையாக்கன் தீவு விநாயகர் பாடசாலை 10 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 94 ஓட்டங்களையே பெற்று 30 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அயர்லாந்துக்கெதிரான ஒற்றை டெஸ்ட் போட்டிக்கான

## ஆப்கானிஸ்தான் குழாமில் குர்பாஸ்

அயர்லாந்துக்கெதிரான ஒற்றை டெஸ்ட் போட்டிக்கான ஆப்கானிஸ்தான் குழாமில் பெயரிடப்பட்டதையடுத்து குறித்த போட்டியில் ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் இப்போட்டியில் டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொள்வாரென நம்பப்படுகிறது.

குழாம்: ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி (அணித்தலைவர்), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ்(விக்கெட் காப்பாளர்), இக்ரம் அலிகில் (விக்கெட் காப்பாளர்), நூர் அலி ஸட்ரான், ரஹ்மத் ஷா, அப்துல் மலிக், நசீர் ஜமால், பஹிர் ஷா, கரிம் ஜனட், ஸஹிர் கான், ஸியா-உர்-ரஹ்மான், கலீல் குர்பாஸ், நிஜாட் மசூட், நவீட் ஸட்ரான், மொஹமட் இப்ராஹிம்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை 28 , பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.